# ஆயிரம் தொழிலாளருக்கு வேலை இல்லை

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 9
இதழ் 228
தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க புரட்டாதி 11 ஜ. ஆகிர் 22 புதன்கிழமை [27-9- 7]

## இங்கு கப்பல் வராததால் ஏற்பட்டுள்ள கஷ்டம்

காங்கேசன்துறை, செவ். யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவைச் சமாஜத்தைச் சேர்ந்த சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் வடபகுதிக்கு உணவுக் கப்பல் அனுப்பப்படாமையால் கடந்த ஒரு மாதகாலமாக வேலையின்றி இருக்கின்றனர். காங்கேசன்துறை துறைமுக பருவகாலம் அக்டோபர் மாதத்துடன் முடிவடைவதால் அதன் பின்னர் மூன்று மாதகாலம் தொழிலாளர் வேலையில்லாதிருக்க நேரிடுவது வழமை. எனவே அக்கால எல்லைக்குள் ஒரு கப்பலையாவது அனுப்பிவைக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாஜத் தலைவர் திரு. சிக்மறிங்கம் உணவுக் கமிஷனரைக் கோரியுள்ளார்.

# அரிசிஒப்பந்தத்தை புதுப்பிக்க சீன விரும்பவில்லையாம்

துன்னாலைச் சம்பவம்

## 'யார் வந்தாலும் சுடு' என்றதும் துப்பாக்கியால் சுட்டார்

### மரண விசாரணையில் தகவல்

யாழ்ப்பாணம், புதன் 'சம்பவம் நடந்த இடத்திற்கு நான் சென்றபோது சின்னத்துரை ஒரு இரட்டைகுழல் துப்பாக்கி வைத்திருப்பதைக்கண்டேன். 'யார் வந்தாலும் சுடு' என்று சீனியப்பு, சின்னத்துரையிடம் கூறினார். சின்னத்துரை, சடையனையும், கந்தையனையும் அத்துப்பாக்கியால் சுட்டார். சடையன் உடனடியாக ரோட்டில் விழ்ந்தார். கந்தையன் சிறிது தூரம் சென்றபின் விழ்ந்தார்.

துன்னாலையை சேர்ந்த கப்பழி சடையனின் மரண விசாரணையின்போது சாட்சியமளித்த 26 வயதான மாணிக்கம் குலம் மனைவி செல்லம் மேற்கண்டவாறு கூறினார், யாழ்ப்பாணம் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. இராசநாயகம் மரணவிசாரணை நடத்தினார்.

துன்னாலை எறிகுண்டு வீச்சு துப்பாக்கி பிரயோக சம்பவத்தில் காயமடைந்த தேவன், சடையன், கந்தையன் ஆகியோர் யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் தேவன், சடையன் ஆகிய இருவரும் மரணமானார்கள்.

செல்லம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: இம்மாதம் 23-ம் தேதி மாலை 3-30 மணிக்கு வேம்படி சந்தியிலுள்ள கடைக்கு சென்றேன். கடைவாசலில் சடை

[6-ம் பக்கம் பார்க்க]

## சந்தேகநபர்கள் மூவர் சரணடைந்தனர்

சாவகச்சேரி, செவ்வாய் துன்னாலையில் கடந்த சனிக்கிழமை நடந்த கலவரத்தில் க. சடையன், தேவன் ஆகிய இருவரும் மரணமானது குறித்துப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த சீனியன் நடேசு அல்லது மாம்பழம், பொன்னன் சின்னத்துரை, கணபதி வேலன் அல்லது சீனியப்பு ஆகிய மூவரும் நேற்றுக் காலை சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் சரணடைந்தனர்.

மாஜிஸ்டிரேட் அம்மூவரையும் அக்டோபர் 5-ந் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

இம்மூவரும் துப்பாக்கி கைக்குண்டுகளைப் பாவித்து இருவரைக் கொலை செய்ததாகவும் மற்றொருவருக்குக் காயம் விளைவித்ததாகவும் சந்தேகிக்கப்பட்டிருந்தனர்.

1. யானை மார்க் நம்பர் 1 சிமெண்ஸ்

ஒடிகொலோன் சிசு பரிபாலிப்புக்கும், நோயாளிகள் அறைக்கும், குளிக்கும் அறைக்கும்.

மறவாதீர்—சிமென்ஸ்.

2. சிமென்ஸ்— வாசனை செவ்விளநீர் தேங்காயெண்ணையும், ஆமணக்கெண்ணை கூந்தல் வளரும் தைலமும் உங்கள் உரோமத்தை செழிப்பாகவும் சிறப்பாகவும் வளர்க்கும்.

3. சிமென்ஸ் புத்தராஜா தைலம்

தலையிடியை ஒரு நிமிடத்தில் நிறுத்திவிடும். எல்லாவிதமான தலையிடிகளுக்கும் பீநசம் சம்பந்தமான சகல நோய்களுக்கும் சிறந்த ஔஷதம்.

இலங்கையிலுள்ள சகல பிரசித்திபெற்ற வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

## ஆர்ஜென்டைனவிடமும் அரிசி பெறமுயற்சி

கொழும்பு, செவ்வாய்

இலங்கை—சின அரசி—ரப்பர் ஒப்பந்தம் இம்முறை புதுப்பிக்கப்படமாட்டாதென்பது இப்போது ஓரளவுக்கு உறுதியாகிவிட்டது.

இலங்கையிடமிருந்து ரப்பர் வாங்கிக்கொண்டு இலங்கைக்கு சீன அரிசிகொடுத்து வந்தது. இதற்கான ஒப்பந்தம் வருடாவருடம்புதுப்பிக்கப்பட்டுவந்தது. இந்த ஒப்பந்தம் இவ்வருடம் செப்டம்பர் மாதம் 30ந் திகதியுடன்காலாவதியாகிறது. ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு பீகிங் செல்வதற்கு இலங்கைத் தூது கோஷ்டி தயாராக இருக்கிறது. இதுசம்பந்தமாக இலங்கை வர்த்தக அமைச்சு எழுதிய கடிதத்துக்கு இன்னும் சீனவிடமிருந்துபதில் கிடைக்கவில்லை.

இலங்கை— சின அரிசி ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்கு சீன விரும்பவில்லையென்று சீனவுடன் தொடர்புள்ள எதிர்க்கட்சி வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

1965-ம் ஆண்டில் யு.என்பி. சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டதிலிருந்து இலங்கை அரசாங்கமும், இலங்கைப் பத்திரிகைகளும், வானொலியும் சீன விரோத நடவடிக்கைகளிலும், பிரசாரங்களிலும் ஈடுபட்டு வந்துள்ளதாக சீன கருதுகிறதாம். இதனால் அரிசி, ரப்பர் ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க சீன விரும்பவில்லையாம்.

### வேறு இடங்களில் முயற்சி

ஆர்ஜென்டைன, பிரேஸில் முதலிய நாடுகளிடமிருந்தும்,இதர நாடுகளிடமிருந்தும் அடுத்த ஆண்டுக்குத் தேவையான அரிசியைப் பெறுவதற்கு அரசாங்கம் முயற்சி செய்து வருகிறது. வெளி நாடுகளிலுள்ள தூதரகங்களுக்கு அரசாங்கம் இது சம்பந்தமாக தந்திச் செய்திகள் அனுப்பியுள்ள.

## "எம். ஜி. ஆர். சுட்டதாக ராதா கூறியது பொய்"

### உதவி பொலிஸ் அதிபர் சாட்சியம்

### மனைவி கீதாவுடன் நீதிமன்றத்தில் ராதா தமாஷ்

சென்னை, செப். 26 எம். ஜி. ஆர். தம்மைச் சுட்டதாக ராதா தெரிவித்துள்ளது பொய் என்றும் ஆதாரமற்றதெனவும் தாம் நடத்திய விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸ் துப்பறியும் பிரிவு உதவி சுப்பிரிண்டன் திரு. ஜி. கே. ரங்கநாதன் எம். ஜி. ஆர்.-எம். ஆர். ராதா வழக்கு விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்ட போது சாட்சியமளிக்கையில் கூறினார்.

எம். ஜி. ஆருக்கு எதிராக எவ்வித சாட்சியமுமில்லையென்பதாலேயே தாம் ராதாவின் கூற்று ஆதாரமற்றது எனக் கூறுவதாக திரு. ரங்கநாதன் எடுத்துக் கூறினார்.

எம். ஜி. ஆர். - எம். ஆர். ராதா வழக்கு சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்தில் நீதிபதி திரு. பி. லக்ஷ்மணன் முன்னிலையில் தொடர்ந்து விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்ட போது சாட்சியமளிக்கையிலேயே திரு. ரங்கநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. ரங்கநாதன்தொடர்ந்து சாட்சியமளிக்கையில் ராதாவின் கழுத்திலிருந்தும் தலையிலிருந்தும் எடுக்கப்பட்டதோட்டாக்கள் ராதாவின் ரிவால்வரிலிருந்து பாய்ந்தவையென இதுபற்றி ஆராய்ந்த துப்பாக்கி நிபுணர் தெரிவித்துள்ளாரென கூறினார்.

தாம் எம். ஜி. ஆரின் சலவைத் தொழிலாளர் (இவர் காது மந்தமானவர்) ஒருவரை விசாரணை செய்ததாகவும் ராதா ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்குச் சென்றதாகக் கூறப்படும் திரைப்படத்தயாரிப்பாளர் வாசுவின் காரைப் பரிசோதனை செய்ததாகவும் தெரிவித்த திரு. ரங்கநாதன் தாம் எம்.ஜி. ஆர்., எம். ஆர். ராதா ஆகியோரை விசாரணை செய்ததாகவும் விசாரணைசெய்த திகதியையும் கூறினார். 'எனதுமுடிவு' என ராதா எழுதியதாகக் கூறப்படும் கடிதம் சம்பந்தமாகவே தாம் ராதாவை விசாரணை செய்ததாக அவர் எடுத்துக் கூறினார். இது சம்பந்தமாக தாம்மதுரையிலுள்ள திராவிட முன்னேற்றக்கழகத்தைச்சேர்ந்த திரு. முருகன் என்பவருடன் தொடர்புகொள்ள முயன்றதாகவும் எவ்வித தொடர்புங்கொள்ள முடியவில்லையெனவும் தெரிவித்தார்.

திரு.ரங்கநாதன் தொடர்ந்து சாட்சியமளிப்பார்.

### ராதாவும் கீதாவும்

நேற்று விசாரணை நடை.

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

துணியுங்கள்-துணியுங்கள். இந்த உலகையே வென்று ஆளப் பிறந்தவர்கள் நாம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

— விவேகானந்தர்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்கஹு புரட்டாதி மீ 11உ (27-9-67)

## நினைவு தின வைபவம்

முன்னைநாள் பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவின் எட்டாவது சிராத்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. ஜனப்பிரதிநிதிகள் சபைக்கட்டடத்தின் முன்னல் நிறுவப்பட்டுள்ள திரு. பண்டாரநாயகாவின் உருவச்சிலையை கவர்னர் ஜெனரல் திறந்துவைத்ததும் அந்த வைபவத்தில் இன்றைய பிரதமர் திரு. டட்லி சேனநாயகா உரை நிகழ்த்தியதும் குறுகிய கட்சிஅரசியல் வேறுபாடுகளுக்கு இடம்கொடுக்காமல் பலர்கலந்துகொண்டதும்நாட்டின் எதிர்காலம் பற்றி நம்பிக்கை அளிப்பதாகும்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர்.டி. பண்டாரநாயகா சிறந்த நாவன்மைபடைத்தவர்; அறிவாளி; அரசியல் அறிவு நிறைந்தவர்; ஆசியாவில் இன்னும்பரீட்சார்த்த நிலையிலேயே இருக்கும் ஜனநாயகத்தில் புதுமைப் பரீட்சைகள் பல செய்த சிறந்த ஜனநாயக வாதியாகவும் விளங்கியவர் திரு. பண்டாரநாயகா. உள்ளூராட்சி அமைச்சராக இருந்தபோது உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஓரளவு அதிக அதிகாரங்கள் வழங்கியவர் அவர். நாட்டின் நிர்வாகம் பரவலாக்கப்பட வேண்டுமென்றும் நிர்வாக அதிகாரங்கள் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாதென்றும் அவர் கருதினர். ஆயினும் ஆசியாவில் புதிதாக விடுதலையடைந்த பல நாடுகளில் போலவே இங்கும் மொழி, மதம், கட்சி ஆகிய குறுகிய கொள்கைகளும் கோட்பாடுகளும் எழுந்தன. இந்த ஜனநாயகப் பரீட்சையில் திரு. பண்டாரநாயகா தமது உயிரையும் பலி கொடுத்தார்.

திரு. பண்டாரநாயகா மறைந்து விட்டாலும் அவரது மனைவியார் திருமதி சிறிமா பண்டாரநாயகா அரசியலில் ஈடுபட்டு நாட்டுக்குப்பணி செய்து வருகிறார். கணவனின் அரசியல் அனுபவத்தை உணர்ந்து அவர் தொண்டாற்ற வேண்டுமென்பதே பலரது விருப்பமுமாகும் கட்சி, மதம், மொழி ஆகிய குறுகிய கொள்கைகளை விடுத்து தனிப்பட்ட விருப்பு, வெறுப்புக்களை நீக்கி, நாட்டினதும் நாட்டுமக்களினதும் நலனையே கருத்தில் கொண்டு நமது தலைவர்களும் அரசியல் வாதிகளும் பணிபுரியவேண்டும் என்பதே மக்களினது விருப்பம். அதனுல்தான் திரு. டட்லி சேனநாயகாவையும் அவரது சகாக்களையும் தெரிவுசெய்த மக்கள் திருமதி சிறிமா பண்டாரநாயகாவையும் அவரது கட்சியினரையும் தெரிவு செய்து பாரிலிமெண்டுக்கு அனுப்பினர். உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் தேசிய நலனைக் கருதி அவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்பது மக்களின் அவா.

சமீபத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்திக்குவிமான நிலயத்தில் அளிக்கப்பட்டவரவேற்பில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தகுந்த இடம் ஒதுக்கப்படவில்லையென சில இடங்களில் சிறிது சலசலப்பு ஏற்பட்டது. இதில் தவறுநடந்துவிட்டதென்பதை அறிந்த பிரதமர் திரு. டட்லிசேனநாயகா, திருமதி சிறிமாவிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதும் அதை ஏற்றுக்கொண்டு அவர் நன்றி தெரிவித்திருப்பதும் அரசியலில் கருத்துவேற்றுமைகளிருப்பினும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளுக்கு இடம்கொடுக்காதபெருந்தன்மைக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது.

உணவு நெருக்கடி, வெளிநாட்டு உறவு, பொருளாதாரப் பிரச்னை முதலிய தேசியப் பிரச்னைகளில் ஆளும்கட்சியும்—எதிர்க்கட்சிகளும் அடிக்கடி கலந்துபேசி, ஒத்துழைத்தால் நாமும் முன்னேறும் தேசியஐக்கியமும் வளர்ச்சியடையும். இலங்கைறிசிய நாடுதான். ஆனுலும் ஆசியாவின் அமைதிக்கும் உலக சமாதானத்துக்கும் ஜனநாயகத்தின் வெற்றிக்கும் அது செய்யவேண்டிய கடமைகள் பல. இங்கு தேசிய ஐக்கியம் நிலவினுல்தான் இதைச் செய்ய முடியும். இதற்கு நமது தலைவர்கள் குறுகியகட்சி அரசியல் வேறுபாடுகளை மறந்து ஒன்றுபட்டு உழைக்க முன்வரவேண்டும்.

# “தமிழ் பேசும் மக்கள் தங்கள் நிலையை உணரவேண்டும்”

— டாக்டர் நாகநாதன்

## “நிர்வாகத்தை பரவலாக்குவதும் சுலபமாக்குவதும் மாவட்டசபைகள்”

— திரு. இராசதுரை

வல்வெட்டித்துறை, செவ்வாய்

தமிழ்பேசும்மக்கள் தங்கள் நிலையை உணர்ந்துகொள்ளவேண்டுமென்று நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடந்த தமிழரசுக்கட்சியின் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினர். திரு. இராசதுரை பேசுகையில் நாட்டின் நிர்வாகத்தை பரவலாக்குவதும் சுலபமாக்குவதும்தான் மாவட்டசபைகள் என்று கூறினர்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி பருத்தித்துறை கிளையினதும்-வாலிபமுன்னணியினதும் முதலாவது ஆண்டு நிறைவு விழாவும் மட்டக்களப்பு நகரின் மேயர் திரு. செ. இராசதுரை எம். பி., செனட்டர் ஜனுப் மசூர் மௌலானு ஆகியோரை பாராட்டிக் கௌரவிக்கும் முகமாகவும் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் வழக்கறிஞர் திரு. ம. வேலும்மயிலும் தலைமையில் நேற்றிரவு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் ஆரம்பமாவதன் முன் நடைபெற்ற சயிக்கிள் ஊர்வலத்தில் கலந்து கொண்ட இராசதுரை, மசூர்மௌலானு, மாணிக்கராசா, துரைரத்தினம் ஆகியோரை சிதம்பராக் கல்லூரி விளையாட்டுமைதானத்தில் வைத்து திரு. வி. வி இராமசாமிப்பிள்ளை மாலை போட்டு ஊர்வலத்தை ஆரம்பித்துவைத்தார். வீதியோரங்கள் யாவும் தமிழரசுக்கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. வழி நெடுகிலும்''மொழி எங்கள் விழி'', ''மாவட்டசபை வேண்டும்'' எனக் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

கூட்டம் ஆரம்பமாதற்கு முன் அண்மையில் கலவரத்தின்போது துப்பாக்கிச் சூடுபட்டு மாண்ட காலம் சென்ற திரு. சிவஞானசுந்தரத்திற்கும், பருத்தித்துறை கைக்கிண்டுவீச்சுக்கு இலக்காகி மாண்ட சிவபாதசுந்தரத்திற்குமாக 2 நிமிடம் மௌன அஞ்சலிசெய்யப்பட்டது.

டாக்டர் நாகநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:- இலங்கையில் தமிழ் பேசும் இனம் என்ன நிலையில் இருந்தது? இப்போ என்ன நிலையில் இருக்கிறது? வருங்காலத்தில் என்ன நிலையை அடையப் போகிறதென ஒவ்வொருவரும் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். நான் சிங்களத் தலைவர்களுடனும் சிங்கள மக்களுடனும் அதிகம் பழகிவந்தவன். அவர்கள் இந்நாடு தங்கள்சொந்தமென்றும் மொழி, தொழில், வியாபாரம், உத்தியோகம் எல்லாம் தங்களுக்குத் தேவையென்றும் தமிழ் பேசுபவர்கள் தங்களது அடிமைகள் என்ற எண்ணம் கொண்டவர்களாகவும் விளங்கி வருகிறார்கள். குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கும் அக் கதியைத்தான் செய்து வருகிறார்கள். தமிழ் மக்களை இந்நாட்டிலிருந்து அழிப்பதற்காக பாடசாலைகளை அரசாங்கம் ஏற்று எங்கள் பிள்ளைகளின் கல்வி வசதியைப் புறக்கணித்து வருவது தெட்டத் தெளிவு.

தீண்டாமை என்று சொல்லிதமிழ் மக்களைப் பிரிக்கப்பார்க்கின்றனர். சிலசிங்கள அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு தீண்டாமைஎன்பது ஒரு பெரும் பெலவீனமென்றே சொல்ல வேண்டும்.

தமிழ் பேசும் இனத்திற்கு தமிழ் மொழியே போதனுமொழியாக இருக்க வேண்டும். இப்போதுள்ள கச்சேரி முறை ஒழிந்து மாவட்டசபை வருமானுல் எங்கள் கையில்தான் எங்கள் அதிகாரம் இருக்கும். அதனுல் எங்கள் தேவைகளை நாமே பூர்த்திசெய்து கொள்ள முடியும்.

### உப உணவு உற்பத்தி

திரு. கே. குணரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

விவசாயிகளைக் காப்பாற்றிப் பொருளாதாரத்தை அதிகரிக்கச் செய்வதற்காகத்தான் நான் வெங்காயம் போன்ற உணவுப் பயிர்ச் செய்கையிலும் மீன் பிடி போன்ற தொழிலிலும் அதிக அக்கறை காட்டமுற்பட்டேன். தென் இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் எங்களுக்கு வெங்காயம் வருமானுல் தமிழ் இனத்தின் வருவாய் குன்றிப் போய்விடுமே என்ற அச்சம் காரணமாகத்தான் விவசா[illegible] உழைத்தும் வருகின்றேன். மாணவர்கள் பெரும்பாலும் உத்தியோகத்தை நம்பியிராமல் இத்தொழிலில் ஈடுபடுவதற்குத் தங்களைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும்.

திருமதி அமிர்தலிங்கம் பேசியபின் திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில் தமிழினத்தின் நன்மைக்காகப் பாடுபட்டவர்கள், பாடுபட்டுக் கொண்டு வருபவர்கள் தமிழரசுக் கட்சியினர்தான் என்றார்.

திருமலையைச் சேர்ந்த திரு. வீரசுப்பிரமணியம் பேசுகையில் இன்று திருக்கோணமலை நமது கட்சியான தமிழரசுக் கட்சியின

[6-ம் பக்கம் பார்க்க]

# ஐயாறன் எழுதுவது

நேற்று ஓர் அன்பர் வந்தார். வயது அறுபது. வேறு ஏதேதோ பேசிய பின் 'ஒரு நல்ல செய்தி'யென்று கூறி, பல வருடங்களாகத் தமக்கிருந்த ஒரு கெட்ட வழக்கத்தைச் சில நாட்களுக்கு முன் அடியோடு விட்டுவிட்டதாகத் தெரிவித்தார்.

''என் தகப்பனுர் பொடி போடுவதுண்டு. அவருக்குத் தெரியாமல் பொடி போட்டு வந்தேன். அவர் மறைந்த பின் அவரது பொடி டப்பியை எடுத்து, பகிரங்கமாகப் பாவிக்கலானேன். பல்லாண்டுகளாக அந்தக் கெட்ட பழக்கத்துக்கு அடிமைப்பட்டிருந்தேன். சமீபத்தில் மூச்சு விடமுடியாமல் மூக்கில் தொந்தரவு ஏற்பட்டது. பொடி போடுவதால்தான் இந்த உபத்திரவம் என்று அறிந்து ''இனி போடுவதில்லை'' என்று கடவுள் பெயரால் உறுதி பூண்டு, டப்பியிலிருந்த பொடியை அகற்றிவிட்டு அதில் விபூதியைப் போட்டு வைத்தேன்.

''பல வருடப் பழக்கமானதால் என்னையும் அறியாமல் என் கை டப்பியைத் தேடுகிறது. இப்போது டப்பியிலுள்ள விபூதியை அடிக்கடி நெற்றியிலிட்டுக் கொள்ளுகிறேன்'' என்றார். பொடி போடாததால் ஏதும் கஷ்டமுண்டா என்று கேட்டதற்கு, கஷ்டமெதுவுமில்லையென்றும், இதற்கு மாருக, மூக்கு உபத்திரவம் எதுவும் இல்லாமல் சுகமாக இருக்கிறதென்றும் சொன்னர். பல்லாண்டு பொடிக்கு அடிமைப்பட்டிருந்த அவர் ஒரு புதிய சுதந்திரம் பெற்றுவிட்ட மகிழ்ச்சியுடன் காணப்பட்டார்.

தன்னைத்தானே ஜயிப்பவன்தான் உலகத்தை ஜயிக்கமுடியுமென்று கூறுவதுண்டு. பொடி முதலிய பலபல கூடாத பழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருக்கும்வரை, அதிலிருந்து விடுபட மனுேதிடம் அற்றவர்கள் வேறு பிரச்னைகளை எப்படித் தீர்க்கமுடியும்?

ஃ ஃ ஃ

ரயிலில் வருகையில் ஓர் அன்பர் ''என்னைத் தெரியுமா?'' என்று கேட்டார். தெரியவில்லை. தாம் ஓர் ஆசிரியரென்றும், ஒரு சங்கத்துக்குத் தலைவரென்றும், சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடுவதாயும் சொன்னர். பேச்சிலிருந்து அவர் கெட்டிக்காரரென்று தெரிகிறது. ஆனுல் அவர் புகைத்துக்கொண்டே பேசியது எனக்குப் பிடிக்கவில்லை. இதைச்சொன்னதும் அவர் உடனே கையிலிருந்த சிகரெட்டை வெளியே எறிந்துவிட்டார். இதைக் கண்டு சற்றே தைரியம் கொண்டு, ''இன்று மட்டுமல்ல, நிரந்தரமாகவே அதை எறிந்துவிட்டால், உங்களுக்கே நல்லதுதான், மாணவர்களுக்கும் மேலான வழிகாட்டியாக இருக்கும்'' என்று கூறியதும் அவர் ஒன்றும் சொல்லவில்லை. என்றுலும் பின்னர் பல மணிநேரம் புகைக்காமலே இருந்துவிட்டார். ஆசிரியரே புகைத்தால், மாணவர்களும் அவர்களைப் பின்பற்றுவார்கள்தானே! தங்கள் பிள்ளைகள் கெட்ட பழக்கங்கள் இல்லாமல் மேலான சுத்தமான வாழ்வு வாழவேண்டுமென்று எண்ணும் பெற்றோர்கள், முதலில் தாங்கள் அதற்கு வழி காட்டவேண்டும். தந்தை பொடிபோட்டால், பிள்ளையும் முதலில் மறைவாகவும் பின்னர் வெளியாகவும்

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

அதைப் பின்பற்றுவது இயற்கையல்லவா?

ஃ ஃ ஃ

கொழும்பிலிருக்கையில், 'பெண்பாவை' என்ற தமிழ் நாடகத்தைப் பார்த்தேன். முன்வரிசையிலிருந்த ஒரு பிரமுகர் நாடகத்தைப் பார்த்துவிட்டு ''இந்தக் கதி எங்களுக்கு ஏற்பட்டுவிடக்கூடாது'' என்றார். மற்றொருவர் ''மனித சுபாவம் இதைவிடக் கேவலமாக முடியாது'' என்றார். கடைசிக் காட்சியில் மனைவி தன் தாலியைக் கழற்றிப் புருஷனிடம் கொடுத்து, தான் போட்ட மோதிரத்தைத் திருப்பிக் கேட்கிறுள். இது பலருக்கும் அதிர்ச்சி கொடுத்ததென்பதில் ஐயமில்லை.

இதைப் பார்த்ததும், தமிழகத்தில் ஈ. வெ. ரா. பெரியார் பிள்ளையார் விக்கிரகத்தை உடைத்து, அதிர்ச்சி வைத்தியம் செய்ததுதான் நினைப்பு வந்தது. அதன்பிறகு, பிள்ளையார் தத்துவங்களை மக்கள் அறியவும், விநாயக வழிபாடு மேலாக நடக்கவும் செய்தது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் தயாரித்த இந்த நாடகம், சமூகத்திலே அதிர்ச்சி வைத்தியம்செய்து பெண் மனதை ஆண்கள் உணர்ந்து, பெண் சுதந்திரத்துக்கு வழிசெய்யுமாயின் இதுவும் ஒரு நன்மைக்குத்தான். நாடகத்தில் ஒரே ஒரு காட்சியே. பின்னணி இசை இல்லை. தமிழ் நாடகத்தில் ஒரு புதிய புரட்சி இது. அரசாங்க அதிபர் வேர்ணன் அபயசேகராவின் துணிச்சல் குறிப்பிடத்தக்கதாகும்.

ஃ ஃ ஃ

ஒட்டி நின்ற உடலுறு
நோய்வினை
கட்டி நின்ற கழிந்தவை
போயறத்
தொட்டு நின்று மச்சோற்
றுத் துறையர்க்கே
பட்டியாப் பணி செய்
மடநெஞ்சமே.

—அப்பர் சுவாமிகள்

[அறியாமையை உடைய நெஞ்சமே! உடலை ஒட்டி நின்ற மிகுந்த நோய்களையும் பிணித்து நிற்கும் வினைகளையும் கழிந்து அறும்படி, சோற்றுத்துறையர் திருவடி மனத்தால் தீண்டி நின்று மீளா அடிமையாகப் பணி (செய்வாயாக.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும்பாகிஸ்தானும நல்லுறவைவளர்க்க முடியுமென ரஷ்யப் பிரதமர் நம்பிக்கை

## இரு நாடுகளின் உறவுக்கும் குறுக்கே காஷ்மீர் பிரச்னை நிற்பதாக அயூப்





மாஸ்கோ.செப்.26

இந்தியாவும் பாகிஸ்தானும், வெளிநாடெதுவினதும் குறுக்கீடின்றி தாமாகவே தமது உறவுகளை சிநேகபூர்வமாக வளர்த்துக் கொள்ள முடியுமெனத்தாம் நம்புவதாக ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின் இங்கு கூறியுள்ளார்.

ரஷ்யாவுக்கு விஜயம்செய்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி பீல்ட் மார்ஷல் அயூப் கானுக்கு,நேற்றிரவு கிரெம்ளினில், ரஷ்ய அதிபர் திரு பொட்கோர்ணி அளித்த போசன விருந்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே திரு. கொஸிஜின் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

### பேதங்களை அகற்ற வேண்டும்

திரு.கொஸிஜின் மேலும் பேசுகையில், ஆசிய பிராந்தியத்தில் சமாதானத்தை நிலைநாட்டும் அக்கறையுடன் இரு நாடுகளும் நல்லுறவை வளர்க்க முற்பட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

ஏகாதிபத்தியவாதத்துக்கு எதிராக நடத்தப்படும் போராட்டத்தின் அடிப்படையில், இருநாடுகளினதும் வித்தியாசங்கள் நீக்கப்பட வேண்டுமென அவர் மேலும் வலியுறுத்தினார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையேயான பேதங்கள்யாவும் அகற்றப்பட முடியும், அகற்றப்பட வேண்டுமென்பதைத் தாஷ்கண்ட்ஒப்பந்தம்நிரூபித்துள்ளதாகவும் ரஷ்யப்பிரதமர் குறிப்பிட்டார்.

### காஷ்மீர் பற்றி அயூப்கான்

ஜனாதிபதி அயூப்கான்பேசுகையில், இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே நல்லுறவை வளர்க்க ரஷ்யா எடுக்கும் முயற்சிக்குத்தமது பாராட்டைத் தெரிவித்தார்.

ஆனல், இந்திய, பாகிஸ்தான் நல்லுறவுக்குக் குறுக்கே நிற்பது காஷ்மீர்பிரச்னையேயாகும் என்று அயூப்கான் திரும்பவும் வலியுறுத்தினார். இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப் பாகிஸ்தான் தயாராக விருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்திய உப கண்டத்தில் ஆயுத சமபலமின்மை வளர்ந்து வருவதும், ஒருபட்ச ஆயுத சேகரிப்பு நடைபெறுவதும், அங்கு அமைதிக்கு அபாயம் விளைவிக்கும் அறிகுறிகளாகுமென்று ஜனாதிபதி அயூப்கான் அச்சம் தெரிவித்தார்.

### ஆயுத உதவிக்கு முக்கியத்துவம்

ரஷ்யத் தலைவர்களுடன் ஜனாதிபதி அயூப்கான் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் பாகிஸ்தானுக்கு ரஷ்யா அளிக்கக்கூடிய ஆயுதஉதவி பற்றியே முக்கியமாக ஆலோசிக்கப்படுமென மாஸ்கோவிலுள்ள அரசியல் அவதானிகள் ஊகிக்கின்றனர்.

## இந்திய மந்திரி பக்ருதீன் அகமத் லண்டன் வந்தார்

லண்டன், செப். 26

வெளிநாடுகளில் பிரயாணம்செய்யும் இந்தியதொழிலபிவிருத்தி மந்திரி திரு. பக்ருதீன் அலி அகமத், லண்டன் வந்து சேர்ந்துள்ளார்.

அவருடன் கூடவே இந்திய மத்திய போக்கு வரத்து மந்திரி திரு. கே. வி. ராவ்வும் வந்துள்ளார்.

திரு. அகமத், நேற்று இங்கு, சாம்ராஜ்ய நாடுகள் காரியதரிசி திரு. ஜோர்ஜ் தொம்ப்ஸனையும், சாம்ராஜ்ய ராஜாங்கமந்திரி சாக்லிடன் பிரபுவையும் சந்தித்துப்பேசினர்.

## படகு விபத்தில் 150 பேர் மரணம்

### கி. பாகிஸ்தானில் கோர சம்பவம்

கி. பாகிஸ்தான்,செப். 26

கிழக்குப் பாகிஸ்தானில், பாரிபூருக்கருகில் நடைபெற்ற ஒரு படகு விபத்தில், ஏறத்தாழ 150 பேர் நீரில் மூழ்கி மரணமடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுமார் 200 பிரயாணிகளைக்கொண்டு சென்ற இந்தப்படகு, ஒரு சிறிய தீவில் போய் முட்டிக்கொண்டதன் விளைவாகவே, விபத்து ஏற்பட்டதாக, நீந்தி வந்து கரை சேர்ந்த சில பிரயாணிகள் தெரிவித்தனர்.

### பிரயாணிகள் நித்திரை

படகு தீவில் முட்டிய போது, படகிலிருந்த பிரயாணிகள் துயில் கொண்டிருந்ததாகவும் அவர்கள் கூறினர்.

படகில் இருந்த 200 பிரயாணிகளில் 50 பேர்தான் உயிர் தப்பியுள்ளனர். இறந்தவர்களின் சடலங்கள் எதுவும் இதுவரை மீட்கப்படவில்லை.

## கியூபாவை தனிப்படுத்துமாறு டீன் ரஸ்க் கோரிக்கை

### லத்தீன் அமெரிக்க நாடுகளிடம்

வாஷிங்டன், செப். 26

கியூபாவைத் தனியாக விலத்திவிடவேண்டுமென அமெரிக்க ராஜாங்க வெளியுறவு மந்திரி திரு. டீன் ரஸ்க், லத்தீன் அமெரிக்க நாடுகளைக் கோரியுள்ளார்.

நேற்று வாஷிங்டனில் நடைபெற்ற அமெரிக்கநாடுகள் இயக்கத்தில் பேசுகையிலேயே திரு. ரஸ்க் இவ்வாறு கோரினர்.

கியூபாவுக்குத் தேவையான மூலதனங்களை மற்றைய லத்தீன் அமெரிக்க நாடுகள் கியூபாவுக்குக் கொடுக்க மறுக்கவேண்டுமென்றுர் திரு. ரஸ்க். லத்தீன் அமெரிக்க நாடுகளில் கியூபாவின் சதிகார நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு இது அவசியமெனவும் திரு. ரஸ்க் வலியுறுத்தினர்.

### ஆர்ஜெண்டீன ஆலோசனை

இயக்கக் கூட்டத்தில் பேசிய ஆர்ஜெண்டீனப் பிரதிநிதி, கியூபா மீது ஆயுத பலம் உபயோகிக்கத் தமது நாடு ஆயத்தமாகவுள்ளதெனக் கூறினர். மற்றைய லத்தீன் அமெரிக்க நாடுகள் அப்போது தாமும் இந்த ஆயுத நடவடிக்கைக்குத் தயாரென அறிவிக்கின்றனவோ அப்போதே ஆர்ஜெண்டீனவும் செயற்பட ஆயத்தமாகவிருக்குமென அவர் குறிப்பிட்டார்.

இந்தோனேஷிய

## தூதரக அதிகாரிகள் இருவர் பீகிங்கிலிருந்து நாடு கடத்தல்

பீகிங், செப். 26

பீகிங்கிலுள்ள இந்தோனேஷியத் தூதரகப்பொறுப்பதிகாரியையும். இரண்டாவது காரியதரிசியையும் நாட்டைவிட்டு வெளியேறுமாறு சீன அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் இருவரையும், எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்குள்ளாக சீனவைவிட்டு வெளியேறும்படி சீன அரசாங்கம் கட்டளை பிறப்பித்துள்ளது.

இம்மாதம் 14-ந் திகதி

[4-ம் பக்கம் பார்க்க]

## சர்வதேச நிதி, உலகவங்கி ஸ்தாபனங்களின் மாநாடு

### அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு உதவி அவசியம்

ரியோ டி ஜெனேரோ, செப். 26

சர்வதேச நிதி ஸ்தாபனம் உலகவங்கி ஆகியவற்றின் வருடாந்தக் கூட்டம் ரியோ டி ஜெனேரோவில் நேற்று ஆரம்பமாகியது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு, அபிவிருத்தியடைந்துள்ளதொழிற்துறை நாடுகள் உதவியளிக்க வேண்டியதன் அவசியத்துக்கு, இக்கூட்டத்தில் உயர் முக்கியத்துவம் அளிக்கப்படுமெனத் தெரிகிறது.

சர்வதேச நிதிஸ்தாபனம், உலக வங்கி ஆகிய இரு ஸ்தாபனங்களின் மாநாட்டையும் பிரேஸில் அதிபர்

[4-ம் பக்கம் பார்க்க]

## போருக்கு முன்னிருந்த நிலைக்கு இஸ்ரேல் திரும்பிச் செல்லாது

### ஐ. நா. பொதுச் சபையில் இஸ்ரேல் வெளியுறவு மந்திரி

நியுயோர்க், செப். 26

மேற்கு ஆசியப் போருக்கு முன்னிருந்த நிலைகளுக்குச் செல்வதென்பதை இஸ்ரேல் ஒருபோதும் ஏற்காதென்று வெளியுறவு மந்திரி திரு. எபான், நேற்று ஐ. நா. பொதுச்சபையில் பேசுகையில் மீண்டும் வலியுறுத்தினர்.

அண்மையில் கார்டூமில் நடைபெற்ற அரபு உச்சி மாநாடு, பேச்சுவார்த்தைகளுக்கு இடமளிக்கவில்லையென்று குறிப்பிட்ட திரு. எபான், அரபு மக்களுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதே இஸ்ரேலின் நோக்கம் என்று கூறினர்.

மேற்கு ஆசியாவில் சமாதானம் ஏற்படும்வரை, போர் நிறுத்த உடன்பாடுகள் அனைத்தையும் இஸ்ரேல் மதித்து நடக்குமென திரு. எபான் உறுதியளித்தார்.

### ஐ. அ. கு. குற்றச்சாட்டு

சூயஸ் கால்வாய்ப் பகுதியில், இஸ்ரேல் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாகவும், மேற்கு ஆசியாவில் நெருக்கடிகளைத் தோற்றுவிக்க இது வழி வகுப்பதாகவும் ஐக்கிய அரபுக் குடியரசுப் பிரதிநிதி சபையில் முன்னதாகப் பேசுகையில் குற்றஞ்சாட்டினர்.

இம்மாதம் 5ந் திகதிக்கும் 21ந் திகதிக்குமிடையே இஸ்ரேல் 7 தடவை போர் நிறுத்தப் பிரகடனத்தை அத்துமீறி நடந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் கைப்பற்றிய பகுதியில், தமது மக்களை இஸ்ரேல் குடியேற்றுவதாக ஜோர்தான் பிரதிநிதி குற்றஞ்சாட்டினர்.

புதுடில்லியில்

## முதல் மந்திரிகள் மாநாடு

புதுடில்லி செப். 26

நாட்டின் உணவு நிலைமையை ஆராய, இந்திய ராஜ்ய முதல் மந்திரிகள் மாநாடு இன்று புதுடில்லியில் தொடங்குகிறது.

அவர்கள், தேசிய உணவுக்கொள்கை ஒன்றையும் ஆராய்வர்.

## 'நாடுகளுக்கிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்க வேண்டும்'

### ஆசிய வர்த்தக மந்திரிகள் மாநாட்டில் தாய்லாந்து பிரதமர்

பாங்கொக், செப். 26

உலகில், செல்வம் கொழிக்கும் நாடுகளுக்கும், வறுமையால் பீடிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கும் இடையேயான வித்தியாசம் ஒழிக்கப்பட வேண்டும். அப்போதுதான் உலகத்தில் அமைதி நிலைக்கும்.

இவ்வாறு, இங்கு ஆரம்பமாகிய ஆசிய வர்த்தக மந்திரிகள் மாநாட்டைத் திறந்துவைத்துப் பேசிய தாய்லாந்துப் பிரதமர் திரு. தானம் கிற்றிக்கச்சென் கூறினர்.

### "உதவி தேவையே"

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள், தமது சுய முயற்சியால் முன்னேற வேண்டியிருந்த போதிலும், அபிவிருத்தியடைந்த நாடுகளின் உதவி அவற்றின் வளர்ச்சிக்கு அவசியமென்பதை எவரும் மறுக்கமுடியாதென்றும் அவர் குறிப்பிட்டார்.

பாங்கொக்கில் நடைபெறும் ஆசிய வர்த்தக மந்திரிகள் மாநாட்டில், இந்தியா உட்பட 12 நாடுகள் பங்குபற்றுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கேசன்துறை

## பட்டினசபை தீர்மானம்

காங்கேசன்துறை, செவ். காங்கேசன்துறைப் பட்டினசபை எல்லைக்குள் வசிப்பவர்களில் இரத்ததானம் செய்ய முன்வருபவர்களை வட்டார அங்கத்தவர்கள் மூலம் ஒழுங்கு செய்து பட்டினசபைமூலம் இரத்த வங்கிக்கு உதவுவதெனவும், பட்டினசபை எல்லைக்குட்பட்ட கல்லூரிகளின் மாணவர்களைக் கொண்டு சிறுபிள்ளைகளுக்கான மலகூடம் அமைப்பதெனவும், சிறுபிள்ளைகளின் மலகூடங்களுக்கான மிதி கற்களை சபை இலவசமாக வழங்குவதெனவும் மற்றும் பட்டினத்திலுள்ள பழைய மலகூடங்களை நீக்கி நவீன கூடங்கள் அமைப்பதெனவும் காங்கேசன்துறைப் பட்டினசபை அதன் தலைவர் திரு. ஆ. ஜ. சதாசிவம் தலைமையில் கூடித் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

## லைசென்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருந்தாராம்

யாழ்ப்பாணம், புதன். வேலக்கட்டியைச் சேர்ந்த சங்கரன் கிட்டினன் என்பவர் லைசென்ஸ் இல்லாத துப்பாக்கியை வைத்திருந்ததாக சாவகச்சேரி பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் சே. விக்னராசாமுன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

எதிரி சார்பில் புறக்டர் எ. அன்ரனி ஆஜரானார். அரசாங்க ரசாயன பரிசோதகரின் அறிக்கை வராததைத் தொடர்ந்து விசாரணையை நீதிபதி நவம்பர் 6-ம் தேதிக்கு ஒத்தி வைத்தார்.

## தமிழ் கூட்டுறவு பரிசோதகர் சிங்கள பிரச்னை

உடுப்பிட்டி, செவ். தமிழ் கூட்டுறவுப்பரிசோதகர்களுக்குச் சிங்களம் தேவையில்லையென்றும், அவர்கள் நியமனம் பெற்ற மொழியிலேயே கடமையாற்ற வசதி செய்து தர வேண்டும் என்று கோரும் மகஜரொன்றைக் இலங்கைக் கூட்டுறவு ஆய்வாளர் கழகம், சென்ற வருடம் ஜூன் மாதம் தமிழரசுக்கட்சிப் பொதுச் செயலாளரான திரு. அ. அமிர்தலிங்கத்திடம் சமர்ப்பித்திருந்தது. இம் மகஜர் சமர்ப்பித்துப் பதினைந்து மாதங்கள் சென்றுவிட்ட போதிலும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென்றும், உடனடியாகத் தங்கள் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறும் தமிழரசுக்கட்சித் தலைமைப் பீடத்திற்கு மேற்படி கழகம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளதாக இலங்கை கூட்டுறவு ஆய்வாளர் கழகச் செயலாளர் தெரிவித்தார். வேறு சில அரசியல் கட்சிகளின் உதவியுடன் இப் பிரச்னையை ஒரு முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் கழகத்தின் நிர்வாக சபை தீர்மானம் இயற்றியுள்ளது.

## உப தபால் நிலையம்

சுழிபுரம், செவ். வட்டுக்கோட்டை [சிவன் கோவிலடிப் பகுதிக்கு ஒரு புதிய உபதபாற் கந்தோர் விரைவில் திறக்கப்படவிருக்கிறது. வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கத்தின் முயற்சியால் நிறுவப்படும் இக் கந்தோர் மிக விரைவில் திறக்கப்படவிருக்கின்றது. வட்டுக்கோட்டை சிவன் கோவிலைப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நீண்ட காலமாகத் தமக்கு ஓர் உபதபால் நிலையம் திறந்து தர உதவவேண்டும் என வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கத்தைக் கோரி வந்தனர்.

உரும்பராய்

## பாடசாலைகள் தரம் பிரிவு

உரும்பராய், செவ். உரும்பராயிலுள்ள பாடசாலைகள் தரம்பிரித்தது பற்றிய இலாகாவின் அறிக்கையில் உரும்பராய் சந்திரோதய வித்தியாசாலை 1-ம் வகுப்புத் தொடக்கம் 7-ம் வகுப்புவரை உள்ள பாடசாலையாகவும் சைவத் தமிழ் வித்தியாசாலை 1-ம் வகுப்பு தொடக்கம் 7-ம் வகுப்புவரையுள்ள பாடசாலையாகவும் உரும்பராய் இந்துக்கல்லூரி 1968-ம் ஆண்டு 7-ம் வகுப்புத் தொடக்கமும் 1969-ல் இருந்து 8-ம் வகுப்புத் தொடக்கம் ஜீ.சீ.ஈ. உயர்தரம் வரைக்கும் உள்ள கல்லூரியாக இருக்கவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. உரும்பராய் இந்துக் கல்லூரி தொடர்ந்தும் ஏ. பிரிவுக் கல்லூரியாக இயங்கும்.

## இளம் பெண் கண்டு பிடிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், புதன். தையல் பாடசாலையிலிருந்து காணாமல் போன 17 வயதான இளம் பெண் கண்டு பிடிக்கப்பட்டு, தாயாருடன் சென்றுள்ளார்.

நுணாவிலைச் சேர்ந்த இப் பெண் யாழ்ப்பாணத்திலுள்ள ஒரு தையல் பாடசாலையிலிருந்து உரும்பராயைச்சேர்ந்த ஒரு வாலிபருடன் கூடிச்சென்றதாகவும் இதனைத் தொடர்ந்து பொலிசில் புகார் செய்யப்பட்டு இப்பெண் கண்டு பிடிக்கப் பட்டுள்ளதாகத் வும்தெரியவருகிறது.

### தூதரக...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் ஜக்கார்த்தாவிலுள்ள சீனத்தூதரகப் பொறுப்பதிகாரியையும், இரண்டாவது காரியதரிசியையும் இந்தோனேஷிய அரசாங்கம் நாடு கடத்தியிருந்தது.

### பதில் நடவடிக்கை

இந்த நடவடிக்கைக்குப் பழிவாங்கும் பதில் நடவடிக்கையாகவே இப்போது பீகிங், இந்தோனேஷியத் தூதரக அதிகாரிகள் இருவரையும் நாடுகடத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ்வதிகாரிகள் இருவரும் சீனாவுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகச் சீனாவின் குறிப்பொன்றில் கூறப்பட்டுள்ளது.

### சர்வதேச...

[3-ம் பக்கத் தொடர்ச்சி

திறந்துவைத்தார்.

### அதிபர்கள் வருத்தம்

சர்வதேச நிதி ஸ்தாபன நிர்வாக டைரக்டர் திரு. போல் சொயிட்ஸரும், உலக வங்கித் தலைவர் திரு. ஜோர்ஜ் வூட்சும் கூட்டத்தில் பங்குபற்றிப் பேசுகையில், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அளிக்கப்பட்டுவரும் நீண்டகால அபிவிருத்திக்கடன் உதவிகளில் உள்ள தாமதத்துக்குத் தமது வருத்தத்தைத் தெரிவித்தனர். இன்னும் துரிதமாக இந்த உதவிகள் அந்நாடுகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

உலகம் முழுவதும் பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டியதன் அவசியத்தை உலக வங்கித்தலைவர் திரு. வூட்ஸ் தமது உரையில் வலியுறுத்தினர்.

# தேநீர்கடை, சலூன்வழக்கு எதிரிகளுக்கு 500 ரூபா பிணை

## அக்டோபர் 16-ம் தேதி விசாரணை

சாவகச்சேரி, செவ்வாய். கொடிகாமம் சலூன் வழக்கில் எதிரியான கே. சின்னுன் என்பவரை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் கே. விக்னராசா விசாரணையை அக்டோபர் மாதம் 16-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் இவ்வருடம் ஜூலை மாதம் 26-ந் திகதி கொடிகாமத்திலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையமொன்றின் உரிமையாளரான கே. சின்னுன் என்பவர் அல்லாரை வாசியான எஸ். கோவிந்தன் என்பவருக்கு சிகை அலங்காரம் செய்ய மறுத்தாரெனச் சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஆர். சி. ஜெயதிலகாவினுல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி தேநீர்க்கடை வழக்கில் எதிரியான ரி. தம்பு என்பவரை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த சாவகச்சேரி மாஜிஸ்டிரேட் விசாரணையை அக்டோபர் 16-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இவ்வழக்கில் சாவகச்சேரியிலுள்ள ஒரு தேநீர்க்கடை உரிமையாளரான ரி. தம்பு என்பவர் இவ்வருடம் ஜூலை மாதம் 31-ந் திகதி ஏ. கனகசபை என்பவருக்கு தேநீர் கொடுக்க மறுத்தாரெனச் சாவகச்சேரிப் பொலிஸ் இன்ஸ்பெக்டரால் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## பிரசார நடவடிக்கை

யாழ்ப்பாணம், செவ். கம்யூனிஸ்ட் கட்சி [சீனப் பிரிவு] வட பகுதியில் தொகுதிவாரியாகத் தீண்டாமை ஒழிப்புப் பிரசாரம் நடாத்த ஏற்பாடுகள் செய்து வருகிறது. தீண்டாமை ஒழிப்பிற்கு ஆதரவான துண்டுப்பிரசுரங்களை வடபகுதியில் விநியோகித்து வருகிறது.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன மாநாட்டை அடுத்த மாதம் 21ந் தேதி யாழ்ப்பாணத்தில் நடாத்த கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது. இதுசம்பந்தமான சுவரொட்டிகள் யாழ்ப்பாணத்தில் எங்கும் காணப்படுகின்றன

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

புதன் 27-9-67

[செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 முஸ்லிம் நற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு. 7-30 குரல் வகை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சிறுவர்மலர்.

இரவு 6-15 வாய்ப்பாட்டு, 6-45 கிராமசஞ்சிகை, 7-15 வாய்ப்பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 8-30 பேச்சு, 8-45 இஸ்லாமியகீதம், 9-30 கலந்துரையாடல், 10-00 நீங்கள் கேட்டவை.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

கடுகதி பஸ் ஓட்டும் பஸ் சாரதி இவர்






குறித்த காலத்துக்குள்ளே குறித்த இடத்தினைப் போய்ச் சேரத் தக்கபடி, விழிப்பாய் இருந்து பஸ் ஓட்டவேண்டியவர் இவர். பஸ்ஸில் பிரயாணம் செய்யும் பிரயாணிகளின் உயிர்களெல்லாம் இவர் கையிலேதான் இருக்கின்றன. அபாயம் எதுவும் நேரிடாமல் அவ்வளவு பேரையும் கவனமாகவும் பாதுகாப்பாகவும் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டியவர் இவர். இவருடைய வேலை எவ்வளவு கடினமானது.

ஓயாது உழைப்பவர்கள், முயற்சியால் உயர்ந்தவர்கள், முன்னேறிச் செல்பவர்கள் எல்லோரும் — மணத்துக்கும் குணத்துக்குமாக — எப்பொழுதும் விரும்பிப் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்.

இவரும் புகைப்பது 5 டயமண்ட் சிகறெற்

1/67 AJNS

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### நன்றி நவிலல்

எனது அருமைத் தந்தையார் இ. காசிநாதன் அவர்களின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச்செய்தி அனுப்பியவர்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். புலவர் கா. வேல்முருகன், மகளிர்கல்லூரி, பண்டத்தரிப்பு. 2391

---

இம்மாதம் 5-ம் திகதியன்று சிவபதமடைந்த எனது அருமைத் தாயாரான வட்டுக்கோட்டை ஆச்சி என அழைக்கப்படுபவரும் மூளாய் செங்காரபிள்ளை உடையார், வட்டுக்கோட்டை மாப்பாண முதலியார் ஆகியோரது வம்சத்தில் தோன்றிய திருமதி தெய்வானைப்பிள்ளை விசுவலிங்கம் அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிக்கின்றோம். ச. கண்ணம்மா, 'சக்திவாசா', மூளாய் றேட், சக்கடத்தார் வளவு, வட்டுக்கோட்டை. 2549

## கினி பிரமுகர்கள்
### ஐவரி கோஸ்ட் விடுதலை செய்தது

அபித்யான், செப். 26

தான்பிடித்துவைத்திருந்த கினி நாட்டைச் சேர்ந்த பிரமுகர்கள் அனைவரையும் ஐவரி கோஸ்ட் விடுதலை செய்துள்ளது.

இப்பிரமுகர்களில் கினி வெளியுறவு மந்திரியும், ஐ. நா. சபையில் கினிப் பிரதிநிதியும் ஒருவராவர்.

இவர்களை ஐவரி கோஸ்ட் அரசாங்கம் கைதுசெய்து வைத்து, மூன்று மாதங்களாகிவிட்டன. கினிப்பிரமுகர்களை விடுதலை செய்யும்படி ஐவரிகோஸ்டைப் பல அண்டை ஆபிரிக்க நாடுகள் கோரியிருந்தன.

## கிறீன்பீல்ட் சென்ஜோன்ஸை தோற்கடித்தது

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற சினேகிதபூர்வமான 1-ம் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் ஒரு கோலால் சென். ஜோன்ஸ் கல்லூரியைத் தோற்கடித்தது.

சென்ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டி ஆரம்பத்திலிருந்து முடியும்வரையும்பெரும் மோதலாகவே இருந்தது. இருகோஷ்டியும் ஒன்றை ஒன்று விட்டுக்கொடுக்காமல் பெரும்பலப்பரீட்சையில் ஈடுபட்டன. போட்டி ஆரம்பமாகி10 நிமிடங்களில்கிறீன்பீல்ட் மத்திய முன்னணி வீரர் பெனடிக்ற் அந்தரத்தில் எந்த வந்தை அற்புதமாகத் தலையால் மோதிக் கோலுக்குள் தட்டி ஒரு அருமையான கோலைப்பெற்றார்.

கடைசிநேரத்தில் இருகோஷ்டியினருக்கும் ஏற்பட்ட பெரும் மோதலினால் மின்னல் வேகத்தில் பந்து சுற்றிச் சுழன்றடித்துக் கொண்டிருந்தது. சென் ஜோன்ஸ் பின்னணி வீரர்களின் அதிர் அடிகள் கட்டத்துக்குக் கட்டம் போட்டிக்கு விறுவிறுப்பையும் பரபரப்பையும் கொடுத்துக்கொண்டிருந்தது. எனினும் சென்ஜோன்ஸ் அதிகமான கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டது என்றே கூறவேண்டும்.

சென்ஜோன்ஸ் கோஷ்டிக்கும் கிறீன்பீல்ட் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மற்றுமொரு போட்டியான 2-ம் பிரிவுப் போட்டி இருசாராரும் தலா 1—1 கோல்கள் பெற்றதனால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

இப்போட்டி ஆரம்பத்தில் விறுவிறுப்புக்குறைவாக இருந்தபோதும் கடைசியில் கடுமையான மோதல்கள் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

1-ம் பிரிவுப் போட்டிக்கு திரு. எஸ். கே. மகாலிங்கமும், 2-ம் பிரிவுப் போட்டிக்கு திரு. எம். தெய்வேந்திராவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினார்கள்.

[வி.நி.]

## யாழ்.பாடசாலைகளின் உதைபந்தாட்டப் போட்டி
### இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை விளையாட்டுச் சங்கத்திலாதரவிலான கல்லூரிகளுக்கிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றுமாலை 3-15 மணியளவில் யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் ஆரம்பமாகிறது.

'எ' பிரிவு, 'பி' பிரிவு என இருபிரிவாக நடத்தப்படவிருக்கும் இச்சுற்றுப்போட்டியின் முதலாவது போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியும் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியும் மோதவிருக்கின்றன.

இப்போட்டியை அடுத்து கொக்குவில் இந்துக்கல்லூரியும், யாழ். மத்தியகல்லூரியும் ஒரு பெரும் பலப்பரீட்சையை உதைபந்தாட்ட ரசிகர்களுக்குஅளிக்கத் தயாராகவிருக்கின்றன. [வி.நி.]

## சமமான முடிவு

யாழ்ப்பாணம், புதன்

இந்த சீசனுக்கான யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முதலாவது உதைபந்தாட்டப் போட்டி மேற்படி கல்லூரி மைதானத்தில் பழைய மாணவர் கோஷ்டியுடன் நடைபெற்றது. சினேகித பூர்வமான இப் போட்டியில் இரு கோஷ்டியினரும் ஆரம்பத்திலிருந்து முடிவு வரையும் நன்றாக ஆடிய காரணத்தால் இரு கோஷ்டியினரும் தலா ஒவ்வொரு கோல்கள் பெற்று ஆட்டத்தை வெற்றிதோல்வியின்றி முடித்தனர்.

இம்போட்டியின் கடைசி நேரம் ஆட்டம் அருமையாக இருந்தது. கட்டத்துக்குக் கட்டம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி வீரர்களின் 'பாசிங்' ஆட்டம் ரசிக்கக் கூடியதாக இருந்தது. எனி

[6-ம் பக்கம் பார்க்க]

## விளம்பரம்

### பெயர்மாற்றம்

மயிலிட்டி கோயிற்பற்று-குரும்பசிட்டியில் பிறந்து முருகர்—பொன்னையா என அழைக்கப்பட்டுவந்த அடியேன் 1-3-67 முதல், முருகர் — உல்லாசர் எனப் பெயரை மாற்றி இருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மு. உல்லாசர்
அரசடிஅம்மன்கோயிலடி,
ஆடியபாதர் வீதி,
திருநெல்வேலி 265

---



யாழ்ப்பாணம் பட்டினம் வீரமாகாளி அம்மன் கோவிற்கு அருகே அம்மன்வீதியில் சில கட்டிடக் காணித் துண்டுகள் விற்பனைக்கு உண்டு.

தவணைமுறையில் பணம் செலுத்த வசதிசெய்து கொடுக்கப்பட்டிருக்கின்றது

யாழ்ப்பாணம் பட்டினம் ஆனைப்பந்தி, உப-தபால் கந்தோருக்கு அருகே சில கட்டிடக்காணித் துண்டுகள் விற்பனைக்குண்டு.

விபரங்கட்கு:

H. P. T.
64, செய்சர் வீதி.
கொழும்பு.
அல்லது
யாழ்ப்பாணம் பிரதிநிதி
த. வடிவநாதன்
"பூக்ஸ்"
71, மின்சாரநிலைய வீதி.
யாழ்ப்பாணம்.

காணிகள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவும். H. P. T. 64, செய்சர் வீதி, கொழும்பு. அல்லது யாழ்ப்பாணம் பிரதிநிதி த.வடிவநாதன், பூக்ஸ், 71, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். 264

### நெல்லியடிப் பட்டினம் கேள்விவிளம்பரம்

1967-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி முற்பகல் 10-30 மணி வரைக்கும்மேற்படி பட்டின விசேட ஆணையாளரால்கீழ்க்காணும்வேலைகளுக்கு பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விகள் அழைக்கப்படுகின்றன.

கேள்விகள் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 50/-ம், பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தியதன்பேரில் 6—10—67 பிற்பகல் 2-00 மணி வரை விசேட ஆணையாளரால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் நெல்லியடிப்பட்டின விசேட ஆணையாளரின் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

சி. சி. மாணிக்கவாசகர்,
விசேட ஆணையாளர்.

வேலை விபரம்

1 முருகையன் கோவிற் தெருவுக்கு கல்லுப் பதித்தலும் தார் ஊற்றலும்.

2. புதுத்தோட்டம் ஒழுங்கை திருத்தி அமைத்தல்.

3. செட்டிய தெருவுக்குக் கல்லுப் பதித்தலும் தார் ஊற்றலும்.

4. சரஸ்வதி வித்தியாசாலை வீதிக்கு கல்லுப்பதித்தலும், தார்ஊற்றலும்.

5. கன்பொல்லைத் தெரு அமைத்தல்.

6. வண்ணான்துறை ஒழுங்கை திருத்தி அமைத்தல்.

7. அத்துளுச் குளத்தின் வடக்குப்புற அலைச்சுவர் அமைத்தல்.

8. கோயிற்சந்தை — பள்ளங்கள் நிரவுதலும், மீன் சந்தைக்கட்டிடத்தின் கூரைக்கு தகரம் அமைத்தலும்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
நெல்லியடிப்பட்டினம்,
கரவெட்டி. 23—9—67
267

---

யாழ். மாவட்ட

## சனசமூக நிலையங்களின் பணிக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்

"இலங்கையில் கலை,கலாச்சார நிகழ்ச்சிகளை நன்கு விருத்தி செய்ய அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களாக முயற்சி எடுத்துவருகின்றது. இதற்காக கலைக்கழகம்பிரதேசகலாமன்றம்ஆகியன நிறுவப்பட்டு மானியமும் வழங்கப்பட்டு வருகின்றது. ஆனால் கடந்த 18வருடங்களாக யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின்சமாசம் ஆற்றிவரும் சேவை பாராட்டுதற் குரியது."

மேற்கண்டவாறு நேற்று முன்தினம் யாழ். நகர மண்டபத்தில் நடைபெற்றயாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாச விழாவில் கலந்து கொண்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார். இராசவாசல் தியாகராஜ முதலியார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

கிராமங்களில் இயல், இசை, நாடகம் நன்கு வளர்ச்சியடைந்ததற்குக் காரணம் இந்த சனசமூக நிலையங்களே என்பதை யாருமே மறக்க முடியாது. தமிழ்க் கலாச்சாரமும், தமிழனின் பண்பாடும் எங்கும் பரவ இச்சங்கங்கள் அயராது பாடுபட வேண்டும்.

[6-ம் பக்கம் பார்க்க]


இப்பொழுது வெற்றிகரமாகக் காண்பிக்கப்படுகிறது!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை]
தினசரி பி.ப. 2-00, மாலை 6-00, இரவு 9-30 மணிக்கு
விஜயா [மட்டுநகர்] ஸ்ரீகிஷ்ணா [திருமலை]
மொடேர்ன் [பண்டாரவளை] விஜிதா [ஹட்டன்] கல்யாணி, [நாவலப்பிட்டி]

அக்டோபர் 1-ம் திகதி முதல்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]

ஜெய்சங்கர் — பேபிபத்மினி
சாந்தா, சுந்தரராஜன், ஜமுனா, நாகேஷ், ஷோபா. ஜி. வரலக்ஷ்மி
எம். எஸ். எஸ். பாக்கியம்
முதலியோர் நடித்த

1965-ம் ஆண்டின் சிறந்தபடமென இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கமும் பாராட்டும் பெற்ற சிறந்த சித்திரம்

கள்ளமில்லா உள்ளத்தினால் பிள்ளைகளெல்லாம்என்று கண்ணெதிரே காணுகின்ற தெய்வங்களானார்.
ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

குழந்தையும் தெய்வமும்

4-வது வெற்றி வாரம்:
கெப்பிட்டல் [கொட்டாஞ்சேனை] ஜெய்சங்கர்- எல்.விஜயலக்ஷ்மி
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] முதலியோர் நடித்த
நாம் மூவர்

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA.
Daily at 4-45, 7-00 & 9-45
Yul Brynner
in
ESCAPE FROM ZAHRAIN

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எம்.ஜி.ஆர்.சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப்பெண்

மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி: 6-30, 9-30
போயா தினங்களில்
3 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
நடித்த
ஆசை அலைகள்

REGAL JAFFNA
Time: 4-45 7-00 p. m.
9-45 p. m.
Marshall Thampson
Dave Dalie
in
THE MIGHTY JUNGLE
in Technicolor

உங்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்!
முகமதலி அப்துலலி
ஸ்தாபனத்தார் இப்பொழுது விற்பனைசெய்கின்றார்கள்
"டீப் பிறீசேர்ஸ்"
(குளிர்சாதனப்பெட்டிகள்)
சொற்ப கையிருப்பு இருப்பதனால் முந்துங்கள்!
உடன் தொடர்பு கொள்ளுங்கள்!
முகமதலி அப்துலலி
போன்: 515 5&7 கிறுன்ட் பஜார், தந்தி: 'சைபீ'
யாழ்ப்பாணம். 266


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "தமிழ் பேசும் மக்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரால் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றார். தீண்டாமை பற்றி அவர்குறிப்பிடுகையில் காலஞ்சென்ற இராஜவரோதயம் முதன் முதலாகத் தீண்டாமையைப் போக்கடிப்பதற்காகத் தனது சொந்தக்கோவிலை எவரும் வழிபடத் திறந்துவிட்டு அதற்கென ஒரு சட்டத்தையும் பாராளுமன்றத்தில் கொண்டு வந்தார் என்று கூறினார்.

செனட்டர் ஜனுப் மசூர் மௌலானு பேசுகையில் குறிப்பிட்டதாவது:

எங்கள் கட்சி நேர்மையான ஒரு கட்சி. அக்கட்சியை வழி நடத்திச் செல்வதற்காக நேர்மையான ஒருவர் அதில் இருந்து வருகிறார். அவர் தான் நமது தந்தை செல்வநாயகம். செல்வநாயகத்தால் தான் தமிழரின் உரிமைகளைப் பெற முடியும். எங்களின் பாஷை தமிழ். முஸ்லிம், இந்துக்கள், கிறிஸ்தவர் யாவரும் பௌத்தர்களோடு சமமாக வாழவேண்டும் என்ற எண்ணத்தைக் கொண்டு அதனை ஆக்கி வைத்தவர் எங்கள் தந்தை. தமிழரசுக்கட்சியினர் தான் கல்முனை கலவரத்தில் வீடு இழந்து தவித்தவர்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தும் அக்கலவரத்தின் நிலைமையை வீடுவீடாகச் சென்று அறிந்து அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து அம்மக்களுக்கு ஆறுதல் செய்து வைத்தவர்கள்.

மட்டக்களப்பு முதலாவது எம். பி.யும் மேயருமான திரு. செ. இராசதுரை பேசுகையில் கூறியதாவது:

ஐனநாயகத்தில் நம்பிக்கை வைத்து வரையறவான ஒரு கொள்கையைக் கடைப்பிடித்து நடந்து வருபவர்கள் நாம். நமது தமிழரசுக் கட்சி கொள்கையைக் கடைப்பிடித்து அதன்படி நடந்து வருகிறது. தமிழ்பேசும் மக்கள் உயர்ந்த கொள்கைகளை கடைப்பிடித்து வந்த காரணத்தால் தான் தமிழரசுக்கட்சி இன்றைய நிலைக்கு தேசிய அரசாங்கத்தை அமைக்க முயன்றது. முதன் முதலாக மகாநாடு நடத்திக் காட்டியவர் காலம் சென்ற திரு. வன்னியசிங்கம் அவர் கட்சியின் இலட்சியத்தை மக்களுக்கு எடுத்துக் கூறவே மகாநாடு வேண்டும் என்று ஆரம்பித்த காரணத்தால் இன்று மக்கள் மத்தியில் செல்வாக்கைப் பெற்றோம். தமிழ் பேசும் மக்களின் விடுதலைக்கு, சுதந்திரத்திற்கு, விமோசனத்திற்காகவே தமிழரசுக்கட்சி உதயமானது. பொதுமக்கள் எங்களிடம் பொறுப்பை அளித்திருக்கிறார்கள். அப்பொறுப்பை தேசிய அரசாங்கத்தில் பாவிக்கவேண்டும். மொழி உரிமை, குடி உரிமை, பிரதேச உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்காகவேதான் பண்டா-செல்வா ஒப்பந்தம் ஏற்பட்டது. சிறுபான்மை மக்களுக்கு அவ்வொப்பந்தம் எவ்வளவோ நன்மையளிப்பதாகவிருந்தது. அதனை திரு. பொன்னம்பலம் தொடக்கம் சிங்கள வகுப்புவாதிகள் வரை சேர்ந்து கிழித்தெறியச் செய்தனர். தமிழ்-சிங்களம் என்பது ஒரு சிவில் வழக்கு. இலங்கையில் சிவில் வழக்குக்கு சிறந்த அப்புகாத்தாக விளங்குபவர் தான் திரு. செல்வநாயகம் ஆனபடியால் சிவில் வழக்கில் நாம்வெல்வோம். அது தமிழ் இனத்தின் வெற்றியாகும். தமிழினத்தின் விடுதலைக்காக போராட்டங்களை நடத்தி வெற்றியும் கண்டோம். தொடர்ந்து வெற்றியைக் காணுவதற்காகவே உழைத்து வருகிறோம். மாவட்டசபை நாட்டின் நிர்வாகத்தை பரவலாக்குகிறது, இலகுவாக்குகிறது. கிராமசபை, பட்டினசபை, நகரசபை, மாநகரசபை, மாவட்டசபை இச்சபைகளினுல் தமிழ்பேசும் மக்கள் நன்மை பெறக்கூடியதாகவிருக்கிறது. நமது இயக்கம் இலட்சியம், சத்தியம், நேர்மை, உழைப்பைக் கொண்டது. அப்படியான இயக்கம் வரலாற்றில் தோற்றது கிடையாது.

பல ஆண்டு காலமாக இருந்துவந்த தீண்டாமை என்ற பேய் வருங்காலத்திலும் தமிழர் மத்தியில் இருக்கக்கூடாது என்ற காரணத்திற்காக தமிழரசுக் கட்சியினர் அன்று தொட்டு உழைத்து வருகிறார்கள். பாரதியைப் பின்பற்றி நடந்துவரும் நாம் பாரதி சொன்ன சாதிகள் இல்லையடி பாப்பா என்ற சொல்லை மறந்துவிடக்கூடாது.

திருவாளர்கள் க. மனேகரன், ஏ. பஞ்சலிங்கம், சி. கணேசமூர்த்தி ஆகியோரும் பேசினர்.

## எம். ஜி. ஆர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெற்றுக்கொண்டிருந்த போது விசாரணையைப் பார்வையிட நீதிமன்றத்துக்கு வந்திருந்த ராதாவின் மனைவி கீதா உற்சாகமாகக் காணப்பட்டார். விசாரணை ஆரம்பமாவதற்கு முன்னரும் விசாரணை முடிவிலும் கீதா கணவர் ராதாவுடன் பேசிக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் என்ன பேசிக்கொண்டார்கள் என்பது தெளிவாகக் கேட்காதிருந்தபோதிலும் ஏதோ சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டார்கள் என்பது இருவரது முகமலர்ச்சிமூலம் உணரக்கூடியதாகவிருந்தது. ராதா ஏதோ ஒரு பகிடிவிட்ட போது கீதா வாய்திறந்து சிரித்தார்.

## சனசமூக நிலையங்க...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. கு. பாலசிங்கம் பேசுகையில் தெரிவித்ததாவது:-

தென்னிலங்கையிலுள்ள சனசமூக நிலையங்களிலும் பார்க்க இப்பகுதி சனசமூக நிலையங்களே சிறந்த சேவையாற்றுகின்றன. இதனுல் யாழ்ப்பாணத்திலுள்ள சனசமூக நிலையங்களின் சேவை பாராட்டுதற் குரியதாகும். ஆங்கில அரசாங்க காலத்தில் ஒரு குறுகிய நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கங்கள் இன்று பரந்த சேவையாற்றுகின்றன. இந்த விரிந்த சேவைக்கு முக்கிய காரணம் இதன் தலைவரான இராசவாசல் தியாகராஜ முதலியாரின் அளப்பரிய சேவையேயாகும். தள்ளாத வயதிலும் அவர் ஆற்றும் சேவையை நாம் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம். [ந. நி.]

உடுப்பிட்டி, திங்கள்

இம்மாதம் 27-ம், 28-ம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நவீன விஞ்ஞானப் பொருட்காட்சியொன்றை நடாத்தவிருக்கின்றனர்.

# கிராமங்களின் கடமை

யாழ்ப்பாணம், செவ்.

'மனிதனுடைய அறிவு வளர்ச்சி பண்பாடு என்பனவற்றை அறிய அவ்வப்பகுதிகளிலுள்ள ஜனசமூக நிலையங்களும், கிராம முன்னேற்றச் சங்கங்களும் தக்க சான்றுகளாகவுளளன. இதனுலேயே வாழ்க்கையின் குறிக்கோள் சரியாக நிறைவேற ஒவ்வொரு கிராமங்கள் தோறும் இப்படியான சங்கங்கள் அவசியமாகின்றன. அரசியல் துறையில் எமக்குக் கிடைத்துள்ள சுதந்திரம் போல பொருளாதாரத் துறையில் இல்லை. இதற்குச் சிறந்த வழி உற்பத்தித்துறையில் நாம் அதிக ஈடுபாடு காட்டவேண்டியது தான்.''

மேற்கண்டவாறு நேற்று மாலை நடைபெற்ற யாழ். மாவட்ட ஜனசமூகநிலையங்களின் சமாஜ விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசியான திரு. சி. பாலசிங்கம் பேசுகையில் தெரிவித்தார். யாழ். மாநகர மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்துக்கு இராசவாசல் முதலியார் தியாகராஜா தலைமைவகித்தார்.

உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில், யுத்த காலத்தில் யுத்தம்பற்றிய பிரச்சார வேலைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட சனசமூக நிலையங்கள் இன்று தேசிய சேவையை ஆற்றும் பெரிய பங்கைச் செய்கின்றன என்றார்.

காலஞ்சென்ற உள்ளுராட்சி விசாரணையாளர் திரு. வி. சி. சண்முகத்தின் உருவப்படத்தை திருமதி வேதவல்லி கந்தையா திரை நீக்கம் செய்துவைத்தார். சமாஜ செயலாளர் திரு. த. துரைசிங்கம் சமாஜ அறிக்கையைச் சமர்ப்பித்தார். இசை, நடன, நாட்டிய நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. சி. பாலசிங்கம் பரிசில்கள் வழங்கினர். [ந. நி.]

## யார்வந்தாலும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யனும், கந்தையனும் நின்றுகொண்டிருந்தனர். அச்சமயம், கொடிகாமப்பக்கத்திலிருந்து தேவன் சைக்கிளில் வேம்படி சந்தியை நோக்கி வந்துகொண்டிருந்தார். அப்பொழுது மாம்பழம் சின்னத்துரையும், சினியப்புவும் பாதன் வீட்டு படலையடியில் நின்றுகொண்டிருந்தார்கள். தேவன்வருவதைகண்டதும், சீனியப்புவும், சின்னத்துரையும் பாதன் வீட்டருகில் உள்ள சிறு ஒழுங்கைக்குள் சென்றனர். தேவன், மாம்பழத்திற்கு அருகில் வந்ததும், பந்துபோன்ற ஒன்றை மாம்பழம், தேவன்மீது எறிவதைக் கண்டேன். தேவன் சைக்கிலுடன் ரேட்டில் வீழ்ந்தார், அந்த நேரம் பெரும் சத்தம் ஒன்று கேட்டது அந்த இடத்தில் புகையும் காணப்பட்டது.

சடையனும், கந்தையனும் அந்த இடத்தைநோக்கி ஓடினர்கள் நானும் அவர்கள் பின்னல் ஓடினேன். சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் நான் சென்றபோது சின்னத்துரை இரட்டைகுழல் துப்பாக்கிவைத்திருந்ததைக்கண்டேன். அவர், சடையனேயும். கந்தையனேயும் சுட்டார்.

பிரேத பரிசோதனை நடத்தியயாழ்ப்பாணம்சட்டவைத்திய அதிகாரிகள் டாக்டர் எஸ். சுப்பிரமணியம், டாக்[illegible] கந்தையா இராசையா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

கொலைஎனத் தீர்ப்பளித்த மரணவிசாரணை அதிகாரி சந்தேகநபர்களான சின்னத்துரை, சினியப்பு ஆகியோரை கைதுசெய்து மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்யுமாறு பருத்தித்துறை பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

# சென்னை ஆஸ்பத்திரியில் கருணநிதி அனுமதி

## அண்ணுவின் புதுடில்லி விஜயம் ரத்து

சென்னை, செப். 25

கார் விபத்தில் சிக்கிய தமிழகபொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணநிதி இப்போது சென்னை அரசாங்க ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவரைப் பரிசோதனை செய்த மூளை சத்திரசிகிச்சை வைத்திய நிபுணரும் ஒரு டாக்டரும் தெரிவித்த ஆலோசனையின் பேரிலேயே இவர் சென்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இவ்விபத்திஞல்கார்ச்சாரதிக்கு காலில் முறிவேற்பட்டதாகவும் திரு. கருணநிதியுடன் காரில் சென்ற தமிழக சட்டசபை தி. மு. க. அங்கத்தவர் ஒருவரும் காயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை புதுடில்லியில் நடைபெறும் ராஜ்ய முதலமைச்சர்கள் மகாநாட்டில் கலந்துகொள்ளவிருந்த தமிழக முதலமைச்சர் திரு.சி. என். அண்ணுதுரை தமது விஜயத்தை ரத்து செய்துள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கருணநிதியின் நிலைமை காரணமாகவே திரு. அண்ணுதுரை தமது விஜயத்தை ரத்துச் செய்ததாகத் தெரிகிறது. புதுடில்லி மகாநாட்டுக்கு திரு. அண்ணுசார்பில் கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன்செல்கிறார்.

### தமிழககல்வி அமைச்சர்

மதுவிலக்கு சட்டம் தொடர்ந்தும் அமுலாக்கப்பட்டுவரும் எனவும் இதில் தமிழக அரசாங்கம் இலாப நஷ்டக்கணக்குப் பார்க்க மாட்டாது எனவும் தமிழக கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் பொலிஸ் பாதுகாப்பு அறையில் இறந்து கிடந்தவரின் மரணம்

# 'கொலை' எனத்தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 4-ம் திகதி இரவு யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலுள்ள பாதுகாப்பு அறையில் இறந்து கிடந்ததாக அறிவிக்கப்பட்ட கோப்பாயைச் சேர்ந்த செல்லன் செல்லத்தம்பியின் [24 வயது] மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரட் திரு. எம். ஜமீல் இது ஒரு கொலை எனத் தீர்ப்பளித்தார்.

மரணமானவர் சம்பவம் நடந்த தினத்தன்று இரவு நல்லூர் சட்டநாதர் கோவிலடியில் ஒரு பெண்ணின் தங்கநகையைத் திருடினுரென்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்ட போது இறந்ததாக ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது.

''கொலை''எனத் தீர்ப்பளித்த மாஜிஸ்டிரேட் இதுபற்றித் தெரிவிக்கையில் மரணமானவர் கேணியில் விழுந்து காயப்பட்டதாகவும், பலர் அவரை அடித்ததாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டதால் அதனுலும் மரணம் நிகழ்ந்திருக்கலாமென்றும் இது பற்றி பொலிஸாரை புலன் விசாரணை செய்யுமாறும் உத்தரவிட்டார். இம்மரண விசாரணையில் பத்துக்கும் மேற்பட்டோர் சாட்சியமளித்தனர். இறந்தவருக்காக புரக்டர் ஜிம்மி இராசரத்தினமும், பொலிஸ் தரப்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் மெண்டிஸ், பொங்லோ ஆகியோரின் உதவியுடன் உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஆர். சி. தவராஜாவும் ஆஜராகியிருந்தனர். [ந. நி]

## கடல் பிரயாணிகள் அனுபவம்

யாழ்ப்பாணம், புதன்

கழுதைப் பிட்டியிலிருந்து நயினதிவுக்குக் கடல் கடந்து செல்லவேண்டியிருந்த 5 பிரயாணிகள் கழுதைப்பிட்டிக் கரையில் நின்றுகொண்டிருந்த இயந்திரப்படகின் சொந்தக்காரரை, தம்மை ஏற்றிச்செல்லுமாறு கேட்டபொழுது 5 பேருக்கு இயந்திரப்படகை விடமுடியாதென மறுப்புத் தெரிவித்ததைத் தொடர்ந்து வள்ளமொன்றில் சென்றபோது இடைவழியில் வள்ளம் கவிழ்ந்ததால் கடலில் தத்தளிக்க வேண்டியநிலை ஏற்பட்டதாம்.

கடலில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்த இவர்களை இயந்திரப் படகுக்காரர் தமது இயந்திரப் படகினுல் காப்பாற்றியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (வி. நி.)

## பாவம் மாணவர்கள்!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் இருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்ற கல்லூரிச் சேவை பஸ் ஒன்று செம்மணி உப்புப் பாத்தியடியில் ''பிறேக்டவுண்'' போட்ட காரணத்தினுல் பாடசாலை மாணவர்கள் செம்மணி வெளியில் இருந்து தத்தம் வீடு நோக்கிப் பாதயாத்திரை செய்தார்களெனத் தெரியவருகிறது.

வெட்டவெளியில் நின்ற பஸ் கண்டக்டரை வேறு பஸ் ஒழுங்கு செய்யப்படுமா? என்று கேட்ட போது பஸ் கண்டக்டர் கையை விரித்தாராம். (வி. நி.)

## சமமான முடிவு

[5-ம் பக்கத்தொடர்ச்சி]

னும் இவர்கள் பலகோல் அடிக்கும் சந்தர்ப்பங்களைத் தவற விட்டது குறிப்பிடத்தக்கது.

பழைய மாணவர்கோஷ்டியின் பின்னணி வீரர்களின் அதிர் அடிகள் ரசிகர்களைப் பிரமிக்க வைத்தது. அவர்கள் எதிர் கோஷ்டியின் கோல்கள் போடும் முயற்சிகளை முறியடித்துக் கொண்டேயிருந்தனர். [வி. நி.]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 19[illegible] செப்டம்பர் மாதம் 27-ந் திகதி அச்சிட்டு [illegible] பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org